

இந்திய சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா (15.08.2026) அன்று தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், உள்ளார்.



சுதந்திர தினத்தையொட்டிதிருவள்ளூர்மாவட்டம்ஆவடி மாநகராட்சி பகுதி, 39வது வார்டு படேல் தெருவில் உள்ள மாநகராட்சி பூங்காவில் தேசியக் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மாநகராட்சி பூங்காவில் மரக்கன்றையும் நட்டார். நிகழ்ச்சியில் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெவினோத், செந்தில், சரளா செந்தில், ஆனந்தன், சசிகலா ஆனந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பி.கே.சேகர்பாபு முன்னிலை! திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் மாபெரும் புகழரங்கம்!

### ஆ.ராசா,எம்,பி, – சுப, வீரபாண்டியன் – சூர்யா கிருஷ்ணமூர்த்தி – மேயர் பிரியா ராஜன் சிறப்புரை!

சென்னை,ஆக.17-

திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவுநாளை யொட்டி போராளி 5""தமிழ் நாடு உயர்ந்தது அவர் கையால் சரித்திரம் மலர்ந்தது அவர் மையால்" எனும் தலைப்பில் 15/08/26 சனிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் சென்னை, மங்களபுரம் சந்திரயோகி சமாதி சாலையில் வட்டக் கழக செயலாளர் ஜி கிருஷ்ணகுமார் அவர்கள் தலைமையில்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி கே சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற புகழரங்கத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர்.சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான திருமதி பிரியா ராஜன் ஆகியோர் உரையாற்றினர்.



மேலும் இப்புகழ் அரங்கத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ப.தாயகம் கவி, கே.எஸ். ரவிச்சந்திரன்,செ. தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, புலவர் சாமி கண்ணு, சரிதா மகேஷ் குமார் எம்.சி, புனிதவதி எத்திராஜன் எம் சி,இரா வீரமணி எம் பெரோஸ் கான் ,கா. ராஜ் முஹம்மது, ,பெரம்பூர் ஆர் ராஜன், எம் சரவணன் , தமிழ்ச்செல்வி சசிகுமார் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இந்த புகழரங்கத்தில் மாவட்ட கழகச் செயலாளர் பி கே சேகர்பாபு பேசியது வருமாறு:-

பல தலைவர்கள் இறந்து அவர்களின் இறுதி ஊர்வலத்தை பார்த்திருப்பீர்கள். ஏன் மறைந்த இந்த தமிழகத்தை மூன்று முறை ஆட்சி செய்த அம்மையார் அவர்களுடைய இறுதி ஊர்வலத்தையும் பார்த்திருப்பீர்கள் அந்த இறுதி ஊர்வலத்தில் வர்ணனையாளர் இதோ ராஜாஜி ஹாலில் இருந்து புறப்படுகிறார் என்று சொல்லியதை கேட்டிருப்போம். அமரர் அதிமுகவின் நிறுவனத் தலைவர் புரட்சி நடிகர் இறுதி ஊர்வலத்தையும் பார்த்திருப்போம்.

ஆனால் இறுதி ஊர்வலத்தில் மற்ற தலைவர்களுக்கெல்லாம் இல்லாத ஒரு பெருமை வாழும் மனிதப் புனிதர் கலைஞர் அவர்களுக்கு இருந்தது.ஆம் அவரின் இறுதி ஊர்வலத்தில் வர்ணனையாளராக இருந்தவர் இதோ புறப்படுகிறார்.. கலைஞர் ராஜாஜி ஹாலிலிருந்து புறப்படுகிறார் என்று சொல்லிவிட்டு.. சொல்கிறார் இந்த ராஜாஜி ஹாலை கட்டமைத்த கலைஞர் அவர்களுடைய இறுதி ஊர்வலம் இங்கிருந்து புறப்படுகிறது என்று கூறுகிறார்.

மேலும் சொல்கிறார் முதன் முதலில் சூரியன் கிழக்கிலே அஸ்தமிக்கப் போகிறது என்று சொல்கிறார். அவர் இறுதி ஊர்வலம் அண்ணா சாலையை கடக்கும் போது சொல்கிறார் இந்த அண்ணா சாலைக்கு. பெயர் வைத்தவரும் கலைஞர் தான் என்கிறார். அவர் வருகின்ற பாதையிலே இருக்கின்ற கலைவாணர் அரங்கத்தை வடிவமைத்து கட்டியதும் கலைஞர் என்கிறார். தொடரும் அவர் பாதையில் மெட்ராஸ் யூனிவர்சிட்டி அந்த பல்கலைக்கழகத்திற்கு சென்னை பல்கலைக்கழகம் என்று பெயர் மாற்றியவரும் கலைஞரே என்கிறார் இப்படி அடுக்கடுக்காக சாதனைகளை ,கலைஞர் அவர்களுடைய பதிவை அந்த வர்ணனையாளர் சொல்லிக்கொண்டே இருந்தார்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திராவிடத்தினுடைய அடையாளம் இந்த சுதந்திர இந்தியாவில் எங்கு நோக்கிலும் திராவிடத்தின் அடையாளம் இல்லாத தூண்களே இல்லை நிலைகளே இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்கியவர் கலைஞர். இறுதியாக சொல்கிறார் அண்ணாவின் இதயத்தை இரவலாக பெற்ற கலைஞர் இதோ அண்ணா நினைவிடத்தை நோக்கி வருகிறார் என்று அழுத்தம் திருத்தமாக சொல்கிறார்.

பல நூறு, பல லட்சம் கோடிக்கணக்கான உடன் பிறப்புகள் தொலைக்காட்சியிலே கண்ணீர் சிந்துகிறார்கள். கோடானு கோடி மக்கள் அந்த இறுதி ஊர்வலத்தில் எழுந்து வா தலைவா! எழுந்து வா தலைவா!! என்று உரத்த குரலோடு பயணிக்கிறார்கள் இப்படிப்பட்ட ஒரு வரலாறு இறந்த பின்பும் உண்டு என்றால் அது முத்தமிழறிஞர் கலைஞர் ஒருவருக்கு தான் இருக்க முடியும் .

ஒரே ஒரு கருத்தை கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன் 1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் அந்த சுதந்திர தாகத்தை கொண்டாடுகின்ற வேளையிலே அண்ணன் காந்தியடிகள் வாடிய முகத்துடன் இருப்பதை பார்த்து நேரு அவர்கள் ஏன் கவலையுடன் இருக்கிறீர்கள் என கேட்டார்கள். அவர் சொல்லுகிறார் இன்னும் 14 நாட்களுக்குத் தான் உணவு நம்மிடையே கையிருப்பில் இருக்கிறது. அப்போது இரும்பு வேண்டுமென்றாலும் வெளிநாடுகளில் கையேந்த வேண்டிய நிலை, நாம் சமையல் செய்கின்ற பாத்திரம் வேண்டுமென்றாலும் ஜெர்மனியை தேடுகின்ற நிலை, கண்ணாடி வேண்டும் என்றாலும் கூட அண்டை நாடுகளை தேடுகின்ற நிலை என்ற கவலையோடு நான் இருக்கிறேன். 14 நாட்களுக்குப் பிறகு மக்களுக்கு வேண்டிய உணவு களஞ்சியம் காலியாகும், இந்த மக்களுக்கு எப்படி உணவு வழங்கப் போகிறோம் என்ற கவலை என்று கூறுகிறார். அப்போது நேரு அவர்கள் சொல்கிறார் அண்டை நாடுகள் நம்மோடு நட்புணர்வோடு இருக்கும் கவலைப்படாதீர்கள் என்று சொல்கிறார்.

இதை ஏன் பின்னோக்கி சொல்கிறேன் என்றால் 1947 ஆம் ஆண்டு அண்டை நாடுகளை நோக்கி கையேந்தி நின்ற இந்திய துணை கண்டம் இன்று ஒட்டுமொத்த இந்திய துணைக் கண்டத்தையும் வாழ்விக்கின்ற நாடாக தமிழ்நாடு இருக்கிறது என்றால் அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் தான் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொண்டு வீழ்ந்து விடுவேன் என்று நினைத்தாயோ பல வேடிக்கை மனிதர்களிடையே என்ற கூற்றோடு நிச்சயம் விழமாட்டோம் இந்த இயக்கமும் வீழாது எந்நாளும் துணிந்து நிற்போம் எந்த தியாகத்திற்கும் நாம் தயார் படுத்தி கொள்வோம் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் இந்த இயக்கத்திற்கு வலிமையும் பொலிவையும் சேர்க்கும் வகையிலே நம்முடைய செயல் அமையட்டும்.

எனக்கு முன்னாள் பேசிய மேயர் கொடியேற்றியதை நினைவுபடுத்துகிறார் இன்னொன்றையும் மறந்து விட்டார் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு வாய்ப்பு கொடுத்ததாகச் சொன்னார் அதிலும் ஒரு சிக்கனம்.

இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு அல்ல ஒட்டு மொத்த தமிழகத்திலே தன் ஒரே ஒரு கையெழுத்தினால் 12,000 க்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகளுக்கு உள்ளாட்சியிலே பிரதிநிதித்துவம் தந்தவர் மாண்புமிகு திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நம் உயிரினும் மேலான அன்புத் தலைவர்.

இன்னொன்றையும் செய்கிறார் 2022 பிப்ரவரிக்கு முன்பு யார் என்றே தெரியாத இவருக்கு திராவிட பாரம்பரியத்தில் வந்தவர் என்பதால் இவர் இன்று மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் .நாட்டுக்கு யார் என்று தெரியாத இவர் மேயர் அதுவும் அவர் பெண்ணாக கொடி ஏற்றி இருக்கின்றார் என்றார் நான் இன்னும் கர்ஜனையோடு சொல்கிறேன் தலித் பெண்ணாக சுதந்திர இந்தியாவின் மாநகராட்சியினுடைய தேசியக் கொடியை ஐந்தாவது முறையாக ஏற்றிய பெருமை திராவிட முன்னேற்ற கழகத்திற்கு உண்டு என்று கூறி மடிந்தாலும் விழுந்தாலும் இயக்கத்தினுடைய உயிர் நாடி திராவிடம் மாடல் ஆட்சியினுடைய நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாழ்க என்று கூறி விட்டு தான் வீழ்வோம் என்று கூறி என்னாலும் இந்த கலைஞர் நினைவு நாளில் உள்ளாட்சியை மீண்டும் பிடிப்போம் என்று சபதமேற்று விடைபெறுகிறேன.

### மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில்

# 4வது மண்டல மாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திரக் கூட்டம்!

### அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்பு!

சென்னை, ஆக.17

சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திர கூட்டம் தண்டையார்பேட்டை வள்ளலார் சாலையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் எம்.சி, தலைமை வகித்தார்.

மண்டல அதிகாரி ராஜ்குமார் முன்னிலை வகித்தார்.

இந்த கூட்டத்தில் திமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் ,ஆகிய கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டுகளில் உள்ள பிரச்சனைகளை குறித்து கூறினர்.

மேலும் செயல்படுத்தப்படாமல் உள்ள பிரச்சினை களையும் சரி செய்து தர கூறினர்.அது குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் வருகின்ற மழைக்காலங்களில் சம அழிப்பதற்கு மின்மோட்டா ர்கள் மரம் வெட்டும் கருவிகள் பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று அனைத்து துறை அதிகாரிகளையும் மண்டல குழு தலைவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் 7 கோடியை 88 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 38 தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டது. முக்கிய தீர்மானங்களாக கொடுங்கையூர் கிருஷ்ண மூர்த்தி சாலையில் புதிதாக 34 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டும் பணி, 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முல்லை நகர் கால்பந்து விளையாட்டு திடல் பகுதியில் உடற்பயிற்சி கூட உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, வியாசர்பாடி சர்மா நகரில்36வது வட்டத்தில் இ சேவை அலுவலகம் 34 முதல் 48 வார்டு வரை உள்ள உட்புற சாலைகளில் சேதம் அடைந்ததை சரி செய்ய 75 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொடுங்கையூர் முத்தமிழ் நகர் பகுதியில் 37 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, முத்தமிழ் நகர் பகுதியில் விளையாட்டு உபகரணங்கள் 10 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வாங்குவது, என பல்வேறு பணிகளை செய்ய தீர்மா னங்கள் நிறைவேற்றி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்த கூட்டத்தில் பகுதி பொறியாளர்கள் அரிநாத், குமார், பகுதி குடிநீர் வாரிய பொறியாளர் அருண்குமார், சுகாதார அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், மின்சார துறை அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 மாதாந்திர கூட்டம் மண்டல அலுவலகத்தில் மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் மண்டல அதிகாரி ராஜ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இடதுசாரிகள், வலதுசாரிகள், கட்சிகளின் மாமன்ற உறுப்பினர்கள் அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயநகர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஆ. மணிரத்தினம் இல்ல விழாவில் தென் மேற்கு மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.உமாசங்கர் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர், உடன் ஏ.அஸ்வின்குமார் ம.இ.து.அ, ஏ.ஆர்.கார்த்தி தொ.ம.து.அ, ஸ்ரீகணேஷ். ரமேஷ், தருண் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தம்பி ஏ. தேவேந்திரன்

**ஆகஸ்ட் 17 (1995)**



**திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசிய உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.**

**"மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்

**ஆகஸ்ட் 17 (2010)**



**நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.**

**35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**